

மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை நகராட்சி கூறைநாட்டில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" முகாமினை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பார்வையிட்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் எஸ்.ஸ்ரீகாந்த், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் ராஜ்குமார், மயிலாடுதுறை நகரக் கழகச் செயலாளரும், நகர்மன்ற தலைவருமான குண்டாமணி (எ) என்.செல்வராஜ் மற்றும் பலர் உள்ளனர்.



விடுதலைப் போராட்ட வீரர் தியாகி இமானுவேல் சேகரன் அவர்களின் 68 வது நினைவு நாளை முன்னிட்டு திருச்சி அகில இந்திய மக்கள் மறுமலர்ச்சி கழக தலைவர் பொன் முருகேசன் அலுவலகத்தில் அமைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்திற்கு தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன், மணப்பாறை சட்டமன்ற உறுப்பினர் ப.அப்துல் சமத் மற்றும் கழக நிர்வாகிகள், அகில இந்திய மறுமலர்ச்சி கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் – 'சிம்பொனி' சிகரம் தொட்ட தமிழன்

# இசைஞானி இளையராஜாவுக்கு பொன்விழா ஆண்டு மாபெரும் பாராட்டு விழா!

## நேரு உள்விளையாட்டு அரங்கில் இன்று நடைபெறுகிறது !

**சென்னை, செப்.13 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் சிம்பொனி சிகரம் தொட்ட தமிழன் இசைஞானி இளையராஜா அவர்களுக்கு பொன்விழா ஆண்டு 50 மாபெரும் பாராட்டு விழா நேரு உள்விளையாட்டு அரங்கில் இன்று (13.9.2025) மாலையில் நடைபெறுகிறது.**

அதன் விவரம் வருமாறு:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால், அன்புமிளிர இசைஞானி என அழைத்துப் போற்றப்பட்ட இசைஞானி இளையராஜா அவர்கள் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி போன்ற பல்வேறு மொழிகளில் 1,500க்கும்மேற்பட்டதிரைப்படங்களில், 8,500க்கும் மேற்பட்ட பாடல்களுக்கு இசையமைத்துள்ளார்.

1975-ஆம் ஆண்டு துவங்கிய இசைஞானி இளையராஜா அவர்களின் இசைப் பயணம் இந்த ஆண்டுடன் 50 ஆண்டுகளை நிறைவு செய்கிறது. திரையிசை மட்டுமின்றி பல்வேறு தனியிசை படைப்புகளையும் வெளியிட்டுள்ளார் இசைஞானி இளையராஜா அவர்கள்.

முழு மேற்கத்திய பாரம்பரிய சிம்பொனி இசை சிகரத்தையும் தொட்டு சாதனை படைத்துள்ளார். இந்த சாதனையை படைத்த முதல் தமிழர் மட்டுமல்ல இசைஞானி இளையராஜா முதல் இந்தியரும் ஆவார். ஆசிய நாடுகளைச் சேர்ந்த எவரும் இச்சாதனையை



இதுவரை நிகழ்த்தவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**முதலமைச்சர் பாராட்டும், வாழ்த்தும்!**

8.3.2025 அன்று இலண்டன் மாநகரில் முதல் நேரடி சிம்பொனி இசைநிகழ்ச்சி நடத்தவிருந்த நிலையில், 2.3.2025 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், இசைஞானி இளையராஜா அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று அவர்களைப் பாராட்டி, அவருக்கு நினைவுப்பரிசு வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார்கள். அது குறித்து சமூக வலைதளப்பதிவில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது,

"தம் கைப்பட எழுதிய Valiant Symphony இசைக்குறிப்புகளை உற்சாகத்துடன் காட்டி மகிழ்ந்தார். உலகத் தமிழர்களின் வாழ்வியலோடு இரண்டறக் கலந்த இசை மூச்சான இளையராஜா அவர்களின் கணக்கற்ற சாதனைகளில் இந்தச் சாதனை ஒரு மணிமகுடமெனத் திகழ வாழ்த்துகிறேன்! " என்று முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அதனைத் தொடர்ந்து, இலண்டன் மாநகர் சென்று சிம்பொனி சாதனை நிகழ்த்தி வெற்றியுடன் சென்னை திரும்பிய நிலையில் 13.3.2025 அன்று இளையராஜா அவர்கள் முதலமைச்சர் அவர்களின் இல்லத்திற்கு வருகை தந்து, நன்றி தெரிவித்தார்கள்.

**முதலமைச்சர் அறிவித்த பாராட்டு விழா!**

இதன் பின்னர், முதலமைச்சர் அவர்கள், தம்முடைய வலைதளப்பதிவில்,

**"இலண்டன் மாநகரில் சிம்பொனி சாதனை படைத்து திரும்பியுள்ள இசைஞானி இளையராஜா அவர்கள் அவரது பயணத்துக்கு வாழ்த்திய என்னை நேரில் சந்தித்து நன்றி கூறினார். அவரது அரை நூற்றாண்டு காலத்திரையிசைப் பயணத்தை அரசின் சார்பில் கொண்டாட முடிவெடுத்துள்ளோம்.!"** என்று குறிப்பிட்டிருந்தார்கள்.

இதன்படி, இன்று (13.9.2025 சனிக்கிழமை) மாலை 5.30 மணியளவில் முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையில் சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கில் திரையுலகில் பொன் விழா காணும் சிகரம் தொட்ட தமிழன் இசைஞானி இளையராஜா அவர்களுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் மிகப் பெரிய அளவில் பாராட்டு விழா நடைபெறவிருக்கிறது.

இந்நிகழ்ச்சியின் தொடக்கத்தில் இன்னிசை நிகழ்ச்சியும், அதனைத் தொடர்ந்து இசைஞானி இளையராஜா அவர்களின் சிம்பொனி இசை நிகழ்ச்சியும் நடைபெறும்.

இவ்விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வரவேற்புரை வழங்குகிறார்கள். தொடர்ந்து நடைபெறும் பாராட்டு விழாவில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையுரை ஆற்றுகிறார்கள். உலக நாயகன் கமல்ஹாசன், எம்.பி., அவர்களும், சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்களும் வாழ்த்துரை வழங்குகிறார்கள். நிறைவாக இசைஞானி இளையராஜா எம்.பி., அவர்கள் ஏற்புரை நிகழ்த்துகிறார்.

இவ்விழாவில். அமைச்சர் பெருமக்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள், திரைக் கலைஞர்கள், திரைத் தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் தமிழ்த் திரையுலக முக்கிய பிரமுகர்கள் முதலானோரும் பங்கேற்கிறார்கள்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நன்றி கூறுகிறார்.

# கரூர் மாவட்டச் செயற்குழு ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி அறிக்கை!

*கரூர், செப். 13 -*

*கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -*

*கரூர் மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் இன்று (13.09.2025 - சனிக்கிழமை) 10.00 மணிக்கு கரூர் மாவட்ட கழக அலுவலகம் (கலைஞர் அறிவாலயம்) தளபதி அரங்கில் மாவட்டக் கழக அவைத் தலைவர் டி.ராஜேந்திரன் தலைமையிலும், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் கே.சி.பழனிச்சாமி, கழக நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், கழக சட்டத் துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், கழக நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம்,*



*அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர். இளங்கோ, கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாமசுந்தரி, கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, கழக சிறுபான்மை பிரிவு துணை செயலாளர் முனவர் ஜான், கழக வர்த்தகர் அணி துணை செயலாளர் வே.பல்லவி ராஜா, கழக தொழிலாளர் அணி துணை செயலாளர் பி.விஜயகுமார் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறுகிறது.*

*அது சமயம் மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், கழக பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் பொறுப்பாளர்கள், மாவட்ட, மாநகர அனைத்து அணி அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்*

**பொருள் :** *1. செப் 15 பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் ஓரணியில் தமிழ்நாடு - வாக்குச்சாவடி அளவிலான உறுதிமொழி.*

*இவ்வாறு கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி தெரிவித்துள்ளார்.*

### புதுக்கோட்டை வடக்கு

# மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் அறிவிப்பு!

*புதுக்கோட்டை, செப். 13 -*

*புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு: -*

*புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் இன்று (13.09.2025 - சனிக்கிழமை) மாவட்ட அவைத்தலைவர் அரு.வீரமணி தலைமையில் புதுக்கோட்டை மாவட்ட தி.மு.க. அலுவலகம் பெரியண்ணன் மாளி*



*கையில் கீரை தமிழ்ச்செல்வன் அவைக் கூடத்தில் நடைபெறுகிறது.*

*புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், இயற்கை வளம் மற்றும் சுரங்கத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், எம்.எம். அப்துல்லா, டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ. முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர்கள் பெரியண்ணன் அரசு,*

*கவிச்சுடர் கவிதைப் பித்தன், மேயர் திலகவதி செந்தில், அஞ்சுகா மீனாட்சி சுந்தரம், புதுக்கோட்டை விஜயா, த.சந்திரசேகரன், பி.டி.அரசக்குமார், வி.என்.மணி,*

*சுப.சரவணன், டாக்டர் எஸ்.ஆர்.அண்ணாமலை, செ.அசோக்பாண்டியன் கே.ஆர்.என்.போஸ், எஸ்.எஸ்.கருப்பையா, க.மதியழகன், பெ.ராஜேஸ்வரி, எம்.லியாகத்அலி, கீரை. தமிழ்ராஜா, சு.சண்முகம், வே.ராஜேஸ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். இந்நிகழ்வுகளில் தொகுதி பொறுப்பாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய,பேரூர் கழக செயலாளர்கள்,*

*மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், வாக்குச் சாவடி முகவர்கள் (பி.எல்.ஏ.2) ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு தமது அறிக்கையில் கூறி உள்ளார்.*

*பொருள்: செப்டம்பர் 17ந்தேதி கரூரில் நடைபெறும் கழக முப்பெரும் விழா, வாக்குச்சாவடி முன்பு உறுதிமொழி ஏற்பு, கழக ஆக்கப்பணிகள.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*

### பெரம்பலூர் மாவட்டத்தில்

# செப்.15 பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் - உறுதிமொழி முன்மொழிவுக் கூட்டங்கள்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை!

பெரம்பலூர், செப்.13 –

பெரம்பலூர் மாவட்டத்தில் நடைபெறும் உறுதிமொழி கூட்டங் கள் குறித்து, மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதன் விபரம் வருமாறு,

துணைப் பொதுச்செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா எம்.பி., வழிகாட்டுதல்படி, போக்குவரத்துத்துறை மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் ஆலோசனைக்கினங்க, பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள, ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் பள்ளி மைதானங்கள், சமுதாயக் கூடங்கள், திருமண மண்டபங்களில் ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பில் இணைந்த குடும்பங்களை அழைத்து நிகழ்ச்சி நடத்திட வேண்டும்.

'என் வாக்குச்சாவடி, வலிமையான வாக்குச்சாவடி' என்பதை உணர்த்திடும் வகையில் அந்தந்த வாக்குசாவடிக்குட்பட்ட மாநிலமாவட்ட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள் சார்பு அணியினர் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும்.

BDA, BLC, ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர்கள் என குறைந்தபட்சம் 100 பேர்களாவது இக்கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டும்.

மாவட்டச் செயலாளர்கள் பகுதி/நகர/ஒன்றிய/பேரூர் செயலாளர்கள் கூட்டத்தை செப்டம்பர் 12 ஆம் தேதிக்குள் நடத்தி கூட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளை வழங்கிட வேண்டும்.

பகுதி/நகர/ஒன்றிய/பேரூர் கழகத்திற்குட்பட்ட வாக்குச்சாவடி முகவர்களை அழைத்து செப்டம்பர் 13 ஆம் தேதிக்குள் ஒன்றிய/நகர/பகுதி/பேரூர்க்கழகச் செயலாளர்கள் அழைத்து கூட்டம் நடத்துவதற்கான வழிமுறைகளை வழங்கிட வேண்டும்.

நிகழ்ச்சியின் நிழற்படங்கள் (Photos), காட்சிப்படங்களை (Videos ) BDA க்கள் வாட்ஸப் குழுக்களில் பதிவிட வேண்டும். அதேபோல செயலியில் பதிவேற்ற வேண்டும். தகவல் தொழில்நுட்ப அணி இப்பணியை ஒருங்கிணைக்க வேண்டும்.

ஒவ்வொரு கூட்டத்தி லும் உறுதி மொழி முன்மொழி யப்பட வேண்டும். உறுதி மொழி ஏற்பினை BDA க்கள் புகைப்படம் & வீடியோ எடுத்து தலைமைக்கு அனுப்பி வைத்திட வேண்டும்.

காலை 9 மணிக்கு பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாளைக்



கொண்டாடி உறுதிமொழியை முன்மொழிவது சிறப்பு, திங்கட்கிழமை என்பதால் மாலை வேளையில் நடத்தினால் சிறப்பாக இருக்கும் எனக் கருதும் வாக்குசாவடிகளில் மாற்றி நடத்திக் கொள்ளலாம்.

அனைத்து வாக்குச்சாவடிகளிலும் செப்டம்பர் 15 அன்று உறுதிமொழி முன்மொழிவு நடைபெறுவதை மண்டல பொறுப்பாளர்களும் மாவட்டச் செயலாளர்களும் தொகுதிப்பார்வையாளர்களும் உறுதி செய்திட வேண்டும்.

எனவே ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் உறுதிமொழி கூட்டங்கள் நடத்திட வேண்டும், இந்த கூட்டத்தில் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள் மற்றும் சார்பு அணியினர் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பெரம்பலூர் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் இவ்வாறு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



கோவை மாநகர் மாவட்டம், தெற்கு சட்டமன்றத் தொகுதி, கோவை மாநகராட்சி மத்திய மண்டலம், வார்டு எண் 80, கெம்பட்டி பகுதி குடியிருப்பு, தர்மராஜா கோவில் தெரு மாநகராட்சி திருமண மண்டபத்தில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" முகாமை மத்திய மண்டல துணை ஆணையர் செந்தில்குமரன், கோவை மாநகராட்சி சுகாதாரக் குழுத்தலைவர் பெ.மாரிச்செல்வன் முன்னிலையில் மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் நேரில் பார்வையிட்டு பயனாளிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினார். இதில் கெம்பட்டி பகுதி பொறுப்பாளர் என்.ஜே.முருகேசன், வட்டக் கழகச் செயலாளர்கள் நா.தங்கவேல், டவுன் பா.ஆனந்த், கழக நிர்வாகிகள் கேசவன், இளைஞர் அணி தினேஷ், கராத்தே ராஜேஷ், வானவன் மணி, முகாம் குழு உறுப்பினர்கள் BLA, BDA, BLC பூத் கமிட்டி நிர்வாகிகள், உறுப்பினர்கள், மாநகராட்சி அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகமான தளபதி அறிவாலயத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் பேசினார். உடன் தொகுதி பார்வையாளர்கள் ஆர்.அருள்செல்வம், இரா.சங்கர், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தராசன், க.இராஜேந்திரன், இல.மேகநாதன், க.மறைமலை, மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், கற்பகம் நீலமேகம் மற்றும் பலர் உள்ளனர்.